20th January 1964] [புலவர் கா. கோவிந்தன்]

அதே நேரத்தில் மத்திய மந்திரிகள் தேசீய ஒருமைப்பாட்டுக்காக இந்தி மொழி கட்டாயமாகப் படிக்க வேண்டிய மொழி என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட முரண்பட்ட கருத்துக்கள் ஏன்? இந்த மந்திரிகளுக்கு அந்த மந்திரிகளின் திட்டங்களைப் பற்றி மறுத்துப் பேச உரம் இருக்கிறதா? இன்னொன்று சொல்லுவேன். நீதித் துறையில் இந்தி வரவேண்டுமென்று சொல்லி விட்டார்கள். அதையொட்டி சட்டக் கமிஷனும் நீதித் துறையில் வழங்க வேண்டிய சொற்கள் இந்தியாக இருக்க வேண்டுமென்று கூறிவிட்டது. அதே நேரத்தில் இந்தியா பூராவுக்கும் நீதி மன்றங்களைப் பொறுத்த வரையில் ஒரே சீராக இருக்கவேண்டுமென்று இந்திச் சொற்களை ஏற்றுக் கொள்ளுமாறு நமது மதிப்புக்குரிய முதல் அமைச்சர் அவர்களிடமும் கூறியிருக்கிறார்கள். நம் முதல் அமைச்சர் அதை ஏற்றுக்கொண்டார்களா? அதைப் பற்றி இந்த மன்றம் தெரிந்துகொள்ள வேண்டும். தமிழ் அழியும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகையால் தான் தமிழை அழிக்க வருகிற இந்தியை எதிர்க்கும் போராட்டத்தில் இறங்கியிருக்கிறோம். உங்களுக்கும் உங்கள் எதிர் காலச் சந்ததிகளுக்கும் சேர்த்து தான் நாங்கள் போராடுகிறோம். அதில் பங்கு கொள்ளாது போனாலும், எங்கள் போராட்டத்தை நையாண்டி செய்வதையாவது கைவிடுங்கள் எனக் கேட்டு விடை பெறுகிறேன், வணக்கம்.

VII—ANNOUNCEMENT.

ARREST OF SOME MEMBERS.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that I have received intimation from the Sub-Inspector of Police, St. Thomas Mount Police Station, that Sri V. Krishnamoorthi, Member of Nellikuppam Constituency and Sri M. R. Krishnamoorthy, Member belonging to Kattumannarkoil Constituency, who are concerned in Sivakanchi Police Station Crime No. 28 of 1964 under section 120 (B), Indian Penal Code, read with section 188, Indian Penal Code and section 30 (2) of the Police Act and section 5 of Prevention of Insults to National Honour Act and sections 109 and 147, Indian Penal Code, have been arrested at 13-45 hours on 20th January 1964 inside the Government Estate, near the Legislators' New Hostel, Madras. They are likely to be lodged in Sivakanchi Police station lock-up.

VI—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

* திரு. கரு. சீமைச்சாமி : மதிப்புக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் ஆற்றிய உரை மீது என்னுடைய கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையிலே காமராஜர் பொறுப்பிலிருந்து பதவி விலகியதைப் பற்றி பாராட்டி, பெருமையாகப் பேசியிருக்கிறார்கள். கனம் ஆளும் கட்சி அங்கத்தினர்கள் கூட காமராஜ்-ப்ளானை கென்னடி, குருஷேவுடன் கூட ஒப்பிட்டுப் பேசி